[2006 ஆகஸ்ட் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை, இந்த நேரத்தில் எழுப்பவே முடியாது. யாரும் எழுப்ப முடியாது. ஒழுங்குப் பிரச்சினை என்பது, அது நடைபெறுகிற நேரத்தில், அதுசம்பந்தமாக யாரும் எழுப்பலாமே தவிர, இப்போது இந்தப் பிரச்சினையை எழுப்புவது, ஒழுங்கு இல்லாத பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

*முற்பகல் 10—05*

## 3. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில், ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவது குறித்து, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். நாளைக்கு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ஆந்திர மாநிலத்திற்குச் சென்று, ஹைதராபாத்திற்குச் சென்று, பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார்கள். ஆனால், இன்று எங்கள் மாவட்டத்திலிருந்து வந்திருக்கக்கூடிய பத்திரிகைகளில், அந்தக் குப்பம் பகுதியில் இருக்கக்கூடிய ஆந்திரப் பொறியாளர் ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். 6 ஆம் தேதி அங்கே உள்ளாட்சித் தேர்தல். உள்ளாட்சித் தேர்தல் முடிந்தவுடன், பூமி பூஜை போட இருப்பதாகவும், ஒரு மாதம் கழித்து அங்கே அணை கட்டுவதற்கான பணிகளைத் தொடங்க இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார். ஆனால், ஆந்திராவினுடைய முதல்வர், நேற்று இங்கே பேட்டி அளிக்கிறபோது, சட்டத்திற்கு உட்பட்டு, அங்கே நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு வார்த்தையை, அங்கே இருக்கக்கூடிய முதலமைச்சர், இங்கே, சென்னைக்கு வந்து, நேற்று பேட்டி கொடுத்திருக்கிறார். ஆகவே, நாளை நம்முடைய அமைச்சர்கள் போகிறபோது, பேச்சுவார்த்தையில் இந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, பாலாற்றின் குறுக்கே அணை கட்டாமல் இருப்பதற்கான வழிவகைக்களைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் இதைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்பொழுதே நாங்கள் பதில் சொல்லியிருக்கிறோம். நிச்சயமாக, நாளை ஆந்திர முதலமைச்சரைப் பார்க்கிறபோது, இதுபற்றிப் பேசப்பட்டு, அதற்கான பதிலும் சட்டமன்றத்திலேயே சொல்லப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. இலங்கை இராணுவத்தினர்க்குக்/காவல் துறையினர்க்குக் கோவையில் அளிக்கும் பயிற்சியை நிறுத்தக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை ஒன்றுக்காகப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, இலங்கையில் சிங்கள இராணுவம், முழுமூச்சான தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. அப்பாவித் தமிழ் மக்கள் வாழும் பகுதியிலே விமானங்கள்மூலம் குண்டுகளை வீசி, குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட பல நூறு தமிழர்களைக் கொன்று குவித்துள்ளது. ஒரு நாட்டில் 500 பேருக்குமேல் கொல்லப்பட்டால், அதைப் போராகக் கருத வேண்டும் என்று, சர்வதேச நெறிமுறைப்படி கருத வேண்டியிருக்கிறது. இப்போது இலங்கையிலே நடப்பது முழுமையான யுத்தமாகும். அதனால்தான், இலங்கையிலே செயல்பட்டுவந்த சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய அமைதிக் காப்புக் குழு, அதனைக் கண்டித்துள்ளது. இந்நிலையில், சிங்களக் காவல் துறையைச் சார்ந்த காவலர்களுக்குக் கண்ணி வெடிகளை அகற்றுதல், தாக்குதல்களைச் சமாளித்தல் போன்ற போர்சார்ந்த பயிற்சிகளை, நமது மத்திய அரசைச் சார்ந்த காவல் துறை–C.R.P.F.–கோவையில் உள்ள பயிற்சிக் கல்லூரியில் அளித்து வருகிறது. இப்படிப் பயிற்சி அளிப்பதனால், சிங்களக் காவல் துறையினர், அந்தத் திறமையைத் தமிழ் மக்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்போகின்றனர். மேலும், பல தமிழர்களைக் கொல்லவே இந்தப் பயிற்சி உதவப் போகிறது. இது தமிழ்நாட்டிலே உள்ள பல கோடி தமிழர்களின் நெஞ்சங்களைக் கொதிப்படையச் செய்துள்ளது.